**செய்தி வெளியீடு எண்:554** **நாள்: 26.08.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.8.2017) தென் மண்டல துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப் போட்டியில் பரிசுகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய விழாப் பேருரை**

******

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி,
இந்த இனிய விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர்
திரு. பெஞ்சமின் அவர்களே!
மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ் பண்பாடு துறை அமைச்சர்
திரு. பாண்டியராஜன் அவர்களே!
நிகழ்ச்சியிலே பங்குகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
திருவள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்
டாக்டர் வேணுகோபால் அவர்களே!
தமிழ் நாடு காவல் துறை தலைமை இயக்குநர்
மரியாதைக்குரிய திரு. டி.கே.இராஜேந்திரன் அவர்களே!
சென்னை மாநகர காவல் ஆணையர்
மரியாதைக்குரிய திரு. ஏ.கே.விசுவநாதன் அவர்களே!
இங்கே வரவேற்புரை நிகழ்த்திய
சென்னை ரைபிள் கிளப் தலைவர்
மதிப்பிற்கும், மரியாதைக்குரிய திரு. டி.வி.சீதாராமா ராவ் அவர்களே!
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே!
நன்றியுரை வழங்க இருக்கின்ற
சென்னை ரைபிள் கிளப் செயலாளர்
திரு. ஆர்.ரவி கிருஷ்ணன் அவர்களே!
இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
சட்டமன்ற உறுப்பினர்கள்
மரியாதைக்குரிய திரு. அலெக்ஸாண்டர் அவர்களே!
மரியாதைக்குரிய திரு. கே.எஸ்.உதயகுமார் அவர்களே!
மரியாதைக்குரிய திரு. பலராமன் அவர்களே!
வருகை புரிந்துள்ள

முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
சகோதரர் திரு. மாதவரம் மூர்த்தி அவர்களே!
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்களே!
இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கின்ற
காவல் துறையைச் சார்ந்த வீரர், வீராங்கனைகளே!
இங்கே பெருந்திரளாகக் கூடியிருக்கின்ற
பார்வையாளர்களே, பெரியோர்களே, தாய்மார்களே!
பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய
வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்து,

‘வில்லுக்கு விஜயன்,
சொல்லுக்கு அகத்தியன்’ என்பார்கள்.
வில் வித்தையில் மிகச் சிறந்த வீரனாக விளங்கிய அர்ச்சுனனின் பெயர் மகாபாரதத்தில் சிறந்த இடத்தைப் பிடித்திருக்கிறது.
குறிதவறாமல் அம்பு எய்துவதற்கு
இன்றைக்கும் மக்கள் அர்ச்சுனனையே
உதாரணமாக கூறுகிறார்கள் என்றால்..
வில்வித்தை என்பது
மனித வரலாற்றில் எத்தனை முக்கியத்துவம்
பெற்றிருக்கிறது என்பதை நாம் உணர முடியும்.
அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில்
முன்னேற்றம் அடைந்த பின்னர் துப்பாக்கி சுடுதலும் அதே அளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

குறிபார்த்து துப்பாக்கி சுடும்
நுணுக்கத்தைப் பெற்றிருக்கின்ற
உங்களையெல்லாம், நான்
அர்ச்சுனனாகப் பார்க்கிறேன்.
இதிகாசத்தில் நீங்கா இடம் பெற்ற
அர்ச்சுனனைப் போல இந்திய வரலாற்றில்
நீங்களும் சிறந்த இடத்தைப் பெற வேண்டும்
என்று மனதார வாழ்த்துகிறேன்.

இப்படிப்பட்ட துப்பாக்கி சுடும் கலையை
மேலும் நவீனப் படுத்துவதற்காக
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
தமிழ்நாடு காவல் துறைக்கு
பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தார்கள்.

காவல் துறையை நவீன மயமாக்கும் திட்டத்தை
தேசியத் திட்டமாக ஏற்படுத்துவதற்கு
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே
முன்னோடியாக திகழ்ந்திருக்கிறார்கள்.
இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே 8.9.2011 அன்று நடைபெற்ற காவல் துறைக்கான
11வது அகில இந்திய துப்பாக்கி சுடும் போட்டியில்
வென்றவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில்
கூறியிருக்கிறார்கள்.
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
1991–ஆம் ஆண்டில்
முதலமைச்சராகப் பதவியேற்றபோது,
தமிழ்நாடு காவல் துறையிடம்
பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும்
எதிர்த்துப் போராட போதிய ஆயுதங்கள்
இல்லாததை உணர்ந்து, அப்போதைய மத்திய
உள் துறை அமைச்சர், நிதித் துறை அமைச்சர்
ஆகியோரை சந்தித்து, தமிழ்நாடு காவல் துறையை
நவீனப்படுத்த 30 கோடி ரூபாய் நிதி வழங்க
வேண்டுமென்று வலியுறுத்தினார்கள்.
அதனால் மத்திய அரசின் கணிசமான
நிதி உதவியுடன் AK 47 ரகம் மற்றும் M.P.5
போன்ற நவீன ஆயுதங்கள், நவீன வாகனங்கள்,
டிஜிட்டல் மைக்ரோவேவ் தொலைதொடர்பு
இணைப்புமுறை உள்ளிட்டவைகளை வாங்கி
தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்தினார்கள்.
தமிழ்நாடு காவல் துறை நவீனப் படுத்தப்பட்டதை
அறிந்து, மற்ற மாநிலங்களும் தங்கள் மாநில

காவல் துறையை நவீனப்படுத்தத் தொடங்கின.
எனவே, மற்ற மாநிலங்களுக்கெல்லாம்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
தலைமையிலான, தமிழ்நாடு அரசுதான் வழிகாட்டியாக
இருந்திருக்கிறது என்று
நாம் பெருமை அடையலாம்.

அதனால்தான், தமிழ்நாடு காவல் துறையை
ஸ்காட்லாந்து காவல் துறையோடு ஒப்பிட்டு
உலகமே போற்றுகிறது.
இப்போது துப்பாக்கி சுடும் போட்டி
நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற
ஆவடி வீராபுரம் தமிழ்நாடு சிறப்பு காவல் படை
மூன்றாவது அணி வளாகத்தில் அமைந்துள்ள
இந்த அரங்கமானது, 1995ஆம் ஆண்டு
நடைபெற்ற தெற்காசிய கூட்டமைப்பு நாடுகளின்
விளையாட்டு போட்டிக்காக
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களால் திறந்து வைக்கப்பட்டது
என்பதை பெருமையுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

சென்னை ரைபிள் கிளப், 2003ஆம் ஆண்டில் தன் பொன் விழாவினைக்
கொண்டாடியபோது
4 கோடியே 85 ஆயிரம் ரூபாய்
செலவில் இந்த அரங்கம் ஒலிம்பிக் தரத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.
மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களின் ஆட்சிக் காலங்களில்,
2011ஆம் ஆண்டு
காஞ்சிபுரம் மாவட்டம், ஒத்திவாக்கத்தில் உள்ள
தமிழ்நாடு கமாண்டோ பயிற்சி பள்ளியில்
26 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில்
11வது அனைத்திந்திய காவல் ரைபிள், ரிவால்வர்
பிஸ்டல் சுடும் போட்டி நடத்தப்பட்டது.

மேலும், தேசிய அளவிலான போட்டிகளில்
கலந்து கொள்ளும் தமிழ்நாடு காவல் துறை
துப்பாக்கி சுடும் குழுவினரின் பயிற்சிக்காக
தளவாடப் பொருட்கள் வாங்குவதற்கு
61 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்
2013ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

அதே 2013ஆம் ஆண்டிலேயே,
இந்த அரங்கத்தின் மேம்பாடு உள்பட இதர பணிகளுக்காக 94 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
1995ஆம் ஆண்டில் கட்டப்பட்ட
இந்த அரங்கின் புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்காக சுமார் 50 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
அந்தப் போட்டிக்கு இந்த ஆண்டு, ஏறத்தாழ
22 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த துப்பாக்கிச் சுடும்
அரங்கமானது, மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்களின் வழியில் செயல்படும்
அம்மாவின் அரசின் நிதியுதவியுடன் செப்பனிடப்பட்டுள்ளது.

தளவாட பொருட்கள் மற்றும் மைதானத்தை சீர் செய்யும் பணிகள் என பொதுவான பணிகள் பல செய்யப்பட்டாலும், தனி மனிதனாக தன்னுடைய
திறனை வெளிப்படுத்தி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கும் வீரர்களுக்கும் போதிய ஊக்குவிப்பினை அளிப்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்போதுமே முதலிடத்தில் இருந்துள்ளார்கள்.

அந்த வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரிலேயே ஜெ.ஜெ.சுழற்கோப்பை என்று தனியாக ஒன்று உருவாக்கப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்படி துப்பாக்கி சுடும் போட்டியில்
தேசிய அளவில் வெற்றி பெற்று
தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் பெறும்
வீரர், வீராங்கனைகளுக்கு
தலா 5 லட்சம் ரூபாய், 3 லட்சம் ரூபாய் மற்றும் 2 லட்சம் ரூபாய் என ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் காரணமாக, ஏற்கனவே 2001, 2004 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு ஒட்டுமொத்த வாகையர் பட்டம் சூடியிருந்தாலும், 2011 ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தமிழ்நாடு வாகையர் பட்டம் சூடி வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
ஆசியுடன் புதுப்பிக்கப்பட்ட இந்த விளையாட்டு
அரங்கத்தில் நடைபெறும் 9வது தென் மண்டல
துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில்
வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு
பரிசுகள் வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியும்
பெருமையும் அடைகின்றேன்.
இந்தப் போட்டிகளில் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, புதுச்சேரி,
அந்தமான் நிகோபர் தீவுகள்
ஆகிய பகுதிகளிலிருந்து வீரர்கள் கலந்து கொண்டுள்ளது மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது.
பல்வேறு பகுதிகளிலிருந்து இங்கே வருகை
தந்திருக்கும் 800 வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஒரே இடத்தில் காண்பது கண்
கொள்ளாக்
காட்சியாக இருக்கிறது.
இப்படிப்பட்ட போட்டிகளில் தான் மொழி, இனம், கலாச்சார வேறுபாடுகளை மறந்து
அனைவரையும் ஒரே இந்திய முகமாக
பார்க்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.
தமிழ்நாடு மிகவும் திறமை மிக்க பல
துப்பாக்கி சுடும் வீரர்களை உருவாக்கியிருக்கிறது.
ரூபா ஸ்ரீநாத்,  சர்வேஷ் சுவரூப் சங்கர்,
பிருதிவிராஜ் தொண்டைமான்,
நிவிதிதா, காயத்ரி, ஸ்ரீநிவிதிதா,
வெங்கட்ராம், சந்தியா
போன்ற வீரர்களும், வீராங்கனைகளும் – ஆசிய அளவிலான போட்டிகளிலும்,
காமன்வெல்த் விளையாட்டுகளிலும், ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளிலும், உலகக்
கோப்பை போட்டிகளிலும் பங்கெடுத்துள்ளதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

திருமதி ரூபா ஸ்ரீநாத் கோலாலம்பூரில் நடைபெற்ற
16வது காமன்வெல்த் விளையாட்டுகளில்
தங்கப் பதக்கம் வென்றிருப்பதுடன்,

அர்ஜுனா விருது பெற்ற
முதல் தமிழ்நாட்டு வீராங்கனை
என்ற பெருமையும் பெற்றுள்ளார்.

இது தவிர, இந்த கிளப்பின் உறுப்பினர்கள்
இந்திய தேசிய ரைபிள் அசோசியேஷனில்
தொழில்நுட்ப அலுவலர்களாகவும், பயிற்சியாளராகவும், மேலாளர்களாகவும் மற்றும்
பன்னாட்டு போட்டிகளில் நடுவர்களாகவும் பணியாற்றியிருக்கின்றனர்.

துப்பாக்கி சுடும் பயிற்சி பெறுபவர்களுக்கு சலுகை விலையில் தளவாடப் பொருட்கள்
வழங்கும் ஒரு சில கிளப்புகளில் இந்த கிளப்பும் ஒன்றாகும்.

மேலும், மாற்றுத் திறனாளி வீரர், வீராங்கனைகளை
உற்சாகப்படுத்தும் வகையில் அவர்களுக்கு
நுழைவு கட்டணத்திலிருந்து விலக்கு
அளிக்கப்பட்டதோடு, சிறப்பு வசதிகளும்
செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

அன்பு, ஒழுக்கம், நம்பிக்கை, தலைமைப் பண்பு,
சமாதானம், ஒத்துழைப்பு, அனைவரையும் மதித்தல், உடல் நலம் பேணுதல் உள்ளிட்ட
உயர்ந்த பண்புகளை இப்படிப்பட்ட
திறன் வளர்க்கும் போட்டிகள் மூலம்
ஏற்படுத்திக் கொள்ள முடியும்.
தேசிய அளவிலான வளர்ச்சியைப்
பெறுவதற்கான போட்டிகளாக
இவை அமைந்திருக்கின்றன.
வெற்றி தோல்வி என்பதை சரி நிலையில்
வைத்து பார்ப்பதுதான்
ஒரு வீரனின் குணமாக இருக்க வேண்டும்.
தோல்வி என்பது முடிவு அல்ல,
வெற்றிக்கான தொடக்கம்
என்பதை உணர்ந்து வெற்றியின் அடுத்த நிலையை
அடைவதற்கான அதிகப்படியான முயற்சியை
தொடங்கி வைக்கவே வெற்றி தோல்வி
முடிவுகளை நாம் பயன்படுத்திக் கொள்ள

வேண்டும் என்ற தத்துவத்தை
புரிந்து கொள்ள வேண்டும்.

1952–ஆம் ஆண்டு குறைந்த உறுப்பினர்களைக்
கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த சென்னை ரைபிள்
கிளப், இப்போது 475 உறுப்பினர்களைக் கொண்டு
பாராட்டும் படியான வளர்ச்சியடைந்துள்ளது.
இதில் சேருகின்ற உறுப்பினர்கள்
தமிழ்நாடு காவல் துறையினரால்
நுணுக்கமாக கண்காணிக்கப்பட்டு,
ஆய்வு செய்யப்பட்டு,
சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்
என்பதை அறிய முடிகிறது.

இந்த ரைபிள் கிளப் இப்போது 65ஆம் ஆண்டில் பயணம் செய்து கொண்டிருப்பது
பாராட்டுக்குரியது.
இந்தக் கிளப்பில் பயிற்சி பெற்றவர்கள் பலர்
தேசிய அளவிலும், உலக அளவிலும்
பல வெற்றி பதக்கங்களைப் பெற்று
தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும்
பெருமை சேர்த்துள்ளனர்.
அத்தகைய வீரர்களையும், வீராங்கனைகளையும்
இந்த இனிய நேரத்தில் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இன்று இந்தப் போட்டியில் கலந்து கொண்ட
வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும்,
பயிற்சி அளித்து ஊக்குவித்த பயிற்சியாளர்கள்
அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் மீண்டும் ஒருமுறை
தெரிவித்து, தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்காக
தொடர்ந்து சிறந்த பங்களிப்பை
அனைவரும் வழங்க வேண்டுகிறேன்.
நன்றி, வணக்கம்.

******

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**